**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **SC.No. 280/2023**
Prosecution: **PW1**

**Deposition of the witness of LW**1

| | | | |
|---|---|---|---|
| **Name** | ரவிச்சந்திரன் | **Taluk** | |
| **Father's Name** | கேசவன் | **District** | திருப்பத்தூர் |
| **Age** | 53 | **Calling** | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், திருப்பத்தூர் |
| **Village/Town** | | **Employee ID Card No.** | 183723 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of August 2025.

2,4,6 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம் உமாராபாத் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.09.2016 கால கட்டத்தில் இராணிப்பேட்டை மது விலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது மது விலக்கு அமல் பிரிவு பொறுப்பு காவல் ஆய்வாளர் , கலவை திரு,வெங்கடேசன் அவர்கள் தலைமையில் நான், லாரன்ஸ் தலைமை காவலர் ஆகியோர் சேர்ந்து, அன்றைய தினம் இரவு 21.00 மணியளவில் சக்கரமல்லூர் கலவை கன்னிகாபுரம் கலங்கல் கூட்ரோட்டில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது பதிவு எண் இல்லாத பசாஜ் பிளாட்டினம் இருசக்கர வாகனத்தின் முன்பக்கத்தில் சுமார் 35 லி கொள்ளளவு கொண்ட வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனுடன் இரண்டு நபர்கள் வந்தனர். அவர்களை பிடிக்க முயற்சித்த போது வண்டியை ஓட்டி வந்த நபர் தப்பி ஓடிவிட்டார். அந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த நபரை பிடித்து விசாரிக்க அவரது பெயரை முன்னுக்கு பின் முரணாக கூறி கடைசியில் சங்கர் த/பெ.கண்ணன் மேல்நேத்தபாக்கம் ஊர் என கூறினார். உடன் வந்த நபர் குறித்து விசாரிக்க ராஜா என்ற கருணாகரன் மேல்நேத்தபாக்கம் எனக் கூறினார். மேற்படி எதிரிகளிடம் காவல் ஆய்வாளர் அன்றைய தினம் இரவு 21.15 முதல்

21.45 வரை விசாரணை செய்து அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அவர் தனது வாக்குமூலத்தில் தப்பியோடிய எதிரியான ராஜா தான் தன்னை ரூ.200/− கூலிக்காக அழைத்து வந்ததாகவும், வழியில் நின்றிருந்த செந்தில் வேல் என்பவர் தான் இதற்கு முதலாளி என்றும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவது சாட்சியாகவும், திரு.லாரன்ஸ் இரண்டாவது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்பு கலவை கூட்ரோட்டில் நான் உள்ளிட்ட மேற்சொன்ன அதிகாரிகள் வாகன தணிக்கையில் இருந்த போது இரவு 23.00 மணிக்கு செந்தில் வேல் என்பவரை கைது செய்து அன்றைய தினம் அவரை காவல் ஆய்வாளர் 23.15 மணி முதல் 1.15 மணி வரை விசாரணை செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவது சாட்சியாகவும், திரு.காமராஜ் இரண்டாவது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம். எதிரி செந்தில் வேல் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி செந்தில் வேலின் ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை கன்னிகாபுரம் கலங்கல் கூட்ரோடு அருகில் உள்ள விஜய் ஆனந்த் என்பவருக்கு சொந்தமான பம்பு செட்டிடம் அழைத்து சென்றால் போலியாக மதுபானம் தயாரிக்க தேவையான பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதை காட்டுவேன் எனக் கூறினார். அதன்பின்பு அன்று இரவு 1.45 மணிக்கு எதிரி செந்தில் வேலை அவர் மேற்சொன்ன இடத்திற்கு அழைத்து சென்ற போது அவர் அந்த இடத்தில் இருந்து 1) 35லி கொள்ளளவு கொண்ட 10 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் முழுதும் நிரப்பப்பட்ட எரிசாராயம், 2) 35லி கொள்ளளவு கொண்ட 7 வெள்ளை நிற பிளாஸ்டின் கேன்கள், 3) 180மிலி அளவு கொண்ட காலி கண்ணாடி பாட்டில்கள் சுமார் 5200 4) 180மிலி பாட்டிலை மூடக்கூடிய 3000 மூடிகள் 5) பாட்டில்களில் ஒட்டக்கூடிய 3000 லேபில்கள் 6) போலியான மது தயாரிக்க தேவையான ஆலோகிராம் எசன்ஸ் 500மிலி பாட்டில் ஒன்று 7) 25லி கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள் 25 8) பாட்டிலின் மூடிய மூடிக் கூடிய காக்கிங் மிசின் ஒன்று மற்றும் தற்போது ஞாபகம் இல்லாத இதர 3 பொருட்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. அப்போது தனிநபர் யாரும் இல்லாததால் நானும் தலைமை காவலர் காமராஜ்−ம் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும். அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றபட்ட எரிசாராயத்தில் இருந்து சாம்பிலுக்கு என 350மிலி எடுக்கப்பட்டது. அந்த மகசரில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கைகளின் போது ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். அதன்பின்பு 22.12.2016 அன்று இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரி ராஜா என்ற கஜேந்திரன் என்பவரை காவல் ஆய்வாளர் மதனலோகன் தலைமையில் நான், திரு.லாரன்ஸ், திரு.காமராஜ் ஆகியோர்

அடங்கிய குழு கண்காணித்து அன்றைய தினம் மாலை 3 மணியளவில் கலவை கூட்ரோட்டில் வைத்து கைது செய்தோம். எதிரி ராஜா தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் மதனலோகன் பதிவு செய்தார். அந்த ஒப்புதல்வாக்கு மூலத்தில் நான் 1வது சாட்சியாகவும் திரு.காமராஜ் 2வது சாட்சியாகவும் கையொப்பம் செய்தோம். அந்த முதலாவது சாட்சி கையெழுத்து **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**S/d. Tmt.M.Sivasakthi.**
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.